SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

பங்குனி, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

18/3A Anai Road
Kaneshapuram
0772242401



# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## பாலர் பாடசாலை மாதாந்தக் கலந்துரையாடல்

முன் பள்ளி ஆசிரிர்களின் பாடசாலைச் செயற்பாடு, முன்னேற்றத்தினை அறியும் பொருட்டு 2014.03.19 ம் திகதி அன்று மாலை 03.00 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 15 முன்பள்ளியைச் சேர்ந்த 29 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

### சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு,அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்டதமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண், 21 பெண் உள்ளடங்கலாக 42 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

1. இம் மாதம் சிறுவர்களினால் நான்கு நடமாடும் நூலக சேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 191 புத்தகங்கள் வெளிச்செல்லப்பட்டுள்ளது

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்வொட்,கிரிக்கெட் வெட்,ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப்பொருட்கள் 07 தடவைகள் வழங்கப்பட்டது.





## முன்மாதிரி பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டுவருகின்றது. தற்போது பண்ணையில் தென்னை, வாழை மரக்கறி பயிரினங்கள் நடுகை பண்ணப்பட்டுள்ளது.







### மாதாந்த மீள்பார்வை

மார்ச் மாத்தின் அலுவலகச் செயற்பாடு , பணியாளர் மேம்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக 2014.03.27 ம் திகதி அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் இடம் பெற்றது இதில் பணியாளர்கள் தங்களுடைய மாசி மாத திட்டம், திட்டமல்லாத செயற்பாடுகள் எதிர்வரும் மாதத்திற்கான முன் வேலைத்திட்டமடங்கிய சமர்ப்பணத்தினைச் செய்தனர்.





SOND

## வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர்,நிறுவனப் பணியாளர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 11 தலைப்பில் 205 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

## கணக்காய்வு

அக்கரைப்பற்று SOND அலுவலகத்திற்கான 2012 ம் வருடத்திற்கான கணக்காய்வானது 2013.03.12 ம் திகதி எமது அலுவலகத்தில் இடம் பெற்று இதற்கான களவிஜயமும் மேற் கொள்ளப்பட்டது

## DRR தொடர்பான கலந்துரையாடல்

மட்டக்களப்பு SOND அலுவலகத்தில் எமது அமைப்பினால் இதுவரை காலத்திலும் செய்யப்பட்ட அனர்த்தக்குறைப்புச் செயற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் 2014.03.21 ம் திகதி நடை பெற்றது இதில் டயக்கோணியா, எமது அலுவலகத்தின் பணியாளர்கள் 11 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.





# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## வாய்ப்புக்களை பயன்படுத்துதல் பயிற்சி

05.03.2014 திங்கட்கிழமை எமது அலுவலகத்தில் "வாய்ப்புக்களை பயன்படுத்துதல் " என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான Training எமது SOND நிறுவன பணிப்பாளர் திரு.ச.செந்துராசா அவர்களால் நடாத்தப்பட்டது.







## முதலுதவி பயிற்சி

06.01.2014 , 07.01.2014 ஆகிய இரு தினங்களும் எமது SOND நிறுவன பணியாளர்கள் மற்றும் மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராமமட்ட தொண்டர்களுக்கான முதலுதவி பயிற்சி நெறி எமது அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது. அதன் தொடர்ச்சியாக 20.03.2014 அன்று மேலும் ஒரு நாள் முதலுதவி பயிற்சி நெறியானது எமது அலுவலகத்தில் நடைபெற்றது. இவ் பயிற்சி நெறியானது இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் மாவட்டத்திற்கு பொறுப்பான முதலுதவி பயிற்சியாளர். திரு.இலங்கேஸ்வரன் அவர்களால் நடாத்தப்பட்டது. அத்துடன் இது தொடர்பான பரீட்சையும் 22.03.2014 சனிக்கிழமை பணியாளர்களுக்கு நடாத்தப்பட்டது.







## வளநிலையப் பாவனை விபரம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள **CBO's** இற்கு எமது வளநிலையத்திலுள்ள பயனுள்ள 43 சுய முன்னேற்ற புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளது.

SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

## பாடசாலை மட்ட சூழல் பாதுகாப்பு போட்டி நிகழ்வு

மேற்படி நிகழ்வானது மட்.கல்லடி வேலூர் சக்தி வித்தியாலய கேட்போர் கூடத்தில் 2014.04.07. அன்று காலை 10.30 மணியளவில் இடம் பெற்றிருந்தது சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு கல்வி வலய ஆரம்பப் பிரிவு கல்விப்பணிப்பாளர் திரு. சச்சிதானந்தம் அவர்களும் கல்லடி காளி கோவில் பிரதம குரு,பாதுகாப்புக் குழு தலைவி,கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

03.04.2014 அன்று முதலாவது சுற்றுப் போட்டியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பேச்சு,கவிதை,நாடகம் போன்ற நிகழ்வுகள் இன்று இடம் பெற்றிருந்தது. இதில் கட்டுரை பேச்சு,கவிதை,நாடகம் போன்றவற்றில் 03 இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களினால் மாணவர்களை கொண்டு தயாரிக்கப்பட்ட சூழல் பாதுகாப்பு நாடகமும் மேடையேற்றப்பட்டது. அத்துடன் சிறந்த சூழல் பாடசாலை அதற்கு உதவி புரிந்த ஆசிரியருக்கான கௌரவிப்பும் இடம் பெற்றிருந்தது. குறிப்பிடத்தக்க விடயமாகும்.






SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.